# சில அரசியல்வாதிகள் தமது அரசியல் எதிர்காலம் பற்றி சிந்திக்கும்போது நான் நாட்டைப் பற்றியே சிந்தித்தேன்!



## இளையோர் முன்னிலையில் ஜனாதிபதி தெரிவிப்பு

புதிய மறுசீரமைப்புக்களின் ஊடாக மாத்திரமே பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தமுடியும் என்றும், கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் போல எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்யும் அரசின் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஏனைய அரசியல்வாதிகள் பொறுப்பேற்கத் தயங்கிய நாட்டையே தான் பொறுப்பேற்றதாகத் தெரிவித்த ஜனாதிபதி, சிலர் தமது அரசியல் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்தித்த போதும், தான் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற "யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம்" உடனான சிநேகபூர்வ கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி தெரிவித்தார்.

"ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்" என்ற இச்சந்திப்பில் நாட்டின் எதிர்காலம் மற்றும் தூரநோக்குக் குறித்து இளைஞர்களுடன்

2 ➤


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 12 திங்கட்கிழமை 25.03.2024 கதிர் 211



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel




## 13 ஐ ஏற்றுக்கொள்ள சகலரும் திரள்வோம்

*சித்தார்த்தன் அறைகூவல்*



13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என புளொட் அமைப்பின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ரெலோவின் 11 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2 ➤

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து மைத்திரிபால அவதூறு பரப்புரையை மேற்கொண்டுள்ளார்!

## முன்னாள் பிரதமர் மஹிந்த கருத்து



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய கருத்தை வெளியுட்டுள்ளமை இன்று முழு நாட்டிற்கும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது, என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் கருத்துக் குறித்து தென்னிலங்கை ஊடகமொன்று கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்றத்தில் அவர் இதனை தெரிவித்திருந்தால் நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ் தனக்கான பாதுகாப்பை அவர் பெற்றிருக்க முடியும். ஆனால், அவர் சட்ட நிலைமையைப் பற்றிக் கவலைப்படாமல்,

அரசியல் அவதூறு பரப்புரையை மேற்கொண்டு விளம்பரம் பெறவே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இனி சட்டச் சூழலை எதிர்கொள்ள வேண்டியேற்படும், என்றார். (ரெம-78)

## அரசாங்கத்தின் மீதான மக்களின் நல்லெண்ணம் சரிவு! 'வெரிட்டே ரிசர்ச்' மேற்கொண்ட ஆய்வில் தெரிவிப்பு

கடந்த மாதத்தின்போது அரசாங்கத்தின் மீதான மக்களின் நல்லெண்ணம் 7 வீதம் ஆகக் குறைந்துள்ளது என 'வெரிட்டே ரிசர்ச்' மேற்கொண்ட சமீபத்திய ஆய்வு அறிக்கையின் படி தெரியவந்துள்ளது. 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் போது இந்த எண்ணிக்கை 9

வீதமாக இருந்தது எனவும் இந்த ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், இந்தக் கணக்கெடுப்பு அறிக்கைகளின்படி, இலங்கையின் தற்போதைய பொருளாதார

நிலைமை சிறப்பாக உள்ளது அல்லது நன்றாக உள்ளது என 9 வீத மக்கள் மாத்திரமே தெரிவித்துள்ளனர். அதேவேளை கடந்த ஆண்டு ஒக்டோபரில் இந்த எண்ணிக்கை 16 வீதம் ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

'நாடு சிந்திக்கும் விதம்' என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்த சமீபத்திய கணக்கெடுப்பு முடிவுகளின் படி, இலங்கையின் 91வீத மக்கள் நாட்டில் பொருளாதார நிலை பலவீனமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். 9 வீத மக்கள் மாத்திரமே பொருளாதார நிலை சிறப்பாக உள்ளதாக தெரிவித்துள்ளனர், எனவும் 'வெரிட்டே ரிசேர்ச்' மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ரெம-79)

## "உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யாரென தெரிந்தால் உண்மையை உடனடியாகக் கூறிவிடுங்கள்"

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம் சஜித் வேண்டுகோள்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்ற உண்மை தனக்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார். இந்த இழிவான பயங்கரவாதச் செயலுக்கு காரணமானவர்கள் யார் என்பதை அறிய தானும் இந்த நாட்டின் 220 இலட்சம் மக்களும் காத்திருப்பதாகவும், உயிர்த் தியாகம் செய்த அப்பாவி மக்களின் நலன் கருதி இனியும் காத்திருக்காமல் உண்மைகளை உடனடியாக வெளிப்படுத்துமாறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2 ➤

## களனிப் பல்கலை மாணவன் உயிரிழப்பு நீதி கோரி சக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அதன் நுழைவாயிலை மறித்து இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் மாணவன் ஒருவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார்.

களனிப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மொனராகலை பகுதியைச் சேர்ந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

பல்கலைக்கழக விடுதியின் நிர்வாக அதிகாரிகளின் கவனக்குறைவினாலேயே மாணவன் உயிரிழந்தார் என்று மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த மாணவனுக்கு நீதி கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

## இரகசிய வாக்குமூலம் வழங்க மைத்திரிபால சி.ஐ.டியில் ஆஜர்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னாலுள்ள உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது தனக்குத் தெரியும் என மைத்திரிபால அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## சில அரசியல்வாதிகள் .....

கலந்துரையாடிய ஜனாதிபதி, இளையோரின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசு மேற்கொண்டு வரும் புதிய பொருளாதார சீர்திருத்தங்களின் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் மக்களுக்கு கிடைக்கும் என்றும், எனவே, தங்களினதும் நாட்டினதும் எதிர்காலத்துக்கான சிறந்த வழி எதுவென்பதை நாட்டின் இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “சரிவடைந்திருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். அவ்வாறான நிலையில் அரசியல்வாதிகள் நாட்டைப் பொறுப்பேற்கத் தயங்கினர். நான் பொறுப்பேற்காவிட்டால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்தேன். அந்த நேரத்தில் நாட்டை பொறுப்பேற்றால் அரசியல் நலன்களை இழக்க நேரிடுமென பலரும் நினைத்தனர். அவர்கள் தங்களைப் பற்றி மட்டும் சிந்தித்தனர். நான் நாட்டை பொறுப்பேற்காவிடின் எமக்கான நாடொன்று எஞ்சியிருக்குமா என்பதையே நான் சிந்தித்தேன்.

நாடாளுமன்றத்தில் தனியொரு ஆசனம் மட்டுமே இருந்தது. எனக்கு இருந்த ஒரே பிரச்சினை அதுவாகவே இருந்தது. அதற்கு முன்னதாக நான் டிசம்பர் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடியிருந்தேன். உலக வங்கியுடனும் கலந்தாலோசித்தேன்.

அதுபற்றி முன்னாள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினேன். அத்துடன் கடந்த தேர்தல் சமயத்தில் நாட்டில் பணமில்லை என்பதை ஐ.தே.க. அறிவித்தது. குறைந்தபட்சம் 300 கோடி டொலர்களையாவது கையிருப்பில் வைத்திருக்க வேண்டியது அவசியம் எனக் கூறியது. அப்போது மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. ஆனால், 2021 ஆம் ஆண்டில் நாம் கூறியவை உண்மையாக நிகழ்ந்தன.

அத்தகைய நிலையில் நான் நாட்டைக் பொறுப்பேற்றேன். நான் நாட்டை பொறுப்பேற்றுக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்? நாட்டின் பொருளாதாரம் முழுமையாக முடங்கிப் போயிருக்கும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடினோம். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெற்றியடைந்துள்ள நிலையில், எமக்குக் கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம்.

இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் எமது நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அந்த நாடுகளின் உதவிகள் கிட்டும். அதனால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது. நாம் இன்னும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தையே கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு வருடத்திலும் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாகக் காணப்படுகின்றது. அந்த இடைவெளியைச் சரிசெய்ய மீண்டும் கடன்களைப் பெறுகின்றோம். இந்நிலை தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிவிடுவோம்.

நீங்கள் 27 வயது இளைஞராக இருந்தால் உங்களுக்கு 37 வயதாகும்போது மீண்டும் இதேபோன்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நீங்கள் தயாரா என்று கேட்க விரும்புகின்றேன். எரிபொருள் கொள்வனவு செய்ய பணம் இல்லாத, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாட்டை ஏற்க அன்று யாராவது இருந்தார்களா? இந்தப் பொருளாதார நெருக்கடியை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லாமல் இருப்பது அனைவரினதும் பொறுப்பாகும். அதற்காக அர்ப்பணிக்க வேண்டும். விரைவில் நாம் பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்துக்கு நாம் செல்ல வேண்டும்.

அதற்கு நகரங்களில் மாத்திரமின்றி கிராமங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தைச் சரியாக வரையறுக்க வேண்டும். அரசின் திட்டங்கள் சரியாகச் செயற்படுத்தப்பட்டால் 2035 ஆம் ஆண்டுக்குள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகர முடியும். அதன் பின்னர் துரித பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடியும்.

அத்துடன் வருடாந்தம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 25 - 50 இலட்சம் வரையில் அதிகரிக்க வேண்டும். மேலும், அதிக பணம் செலவிடும் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர வேண்டும்.

மேலும், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் கிராமங்களைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதனூடாக விவசாய ஏற்றுமதி இலக்குகளை விரைவில் அடையலாம். இதன் போது புதிய பயிர்களை விளைவிப்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியிருப்பதோடு, தூரியன் உற்பத்தி குறித்து தாய்லாந்து அரசுடன் கலந்துரையாடிள்ளோம். மேலும், இந்நாட்டில் பயிர் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும்.

சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்திற்கான சாத்தியக்கூறுகள் நாட்டில் அதிகமாக உள்ளன. அதனால் காற்றாலை மற்றும் அனல் மின்சாரத்திற்கான வலுசக்தி உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தி, தேவைக்கு அதிகமான மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முடியும். அத்துடன் இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையில் முதலீட்டு வலயத்தை உருவாக்க ஆயிரம் ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மகாவலி ஏ - பீ வலயங்களை அபிவிருத்தி செய்து நவீன விவசாயத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

பிங்கிரிய மற்றும் வடக்கில் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதற்குத் தேவையான காணிகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டங்கள் அடுத்த 05 வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காகவே இதையெல்லாம் செய்கிறேன். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும், ஹிங்குரக்கொட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதோடு இந்த வருடம் ஹிங்குரக்கொட விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்துக்கு உள்ளக விமான சேவைகள் கிடைக்கும்.

மேலும், பொலனறுவை வரலாற்று முக்கியமான நகரத்தை சுற்றுலாப் பயணிகளுக்காக இரவும் பகலும் திறந்துவிடலாம். நமது கலாசார அழகுகளையும் நவீன நடனங்கள் மற்றும் உள்ளூர் உணவு மற்றும் பானங்களுடன் இணைத்து சுற்றுலாத் திட்டங்களைத் தயாரிக்க முடியும். இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எனவே, நாடு எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும். உங்கள் எதிர்காலத்தை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். உங்கள் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.” - என்றார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் பிரதி அமைச்சர் சந்திரசிறி சூரியராச்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மின்னேரியா தொகுதி அமைப்பாளர் ஜகத் சமரவிக்ரம, யுனைடட் யூத் ஆலோசனை சபையின் தலைவர் சுதத் சந்திரசேகர, அதன் பணிப்பாளர் நாயகம் பிரசாத் அசங்க ரத்நாயக்க, தேசிய அமைப்பாளர் விஜித் அநுராத மற்றும் பொலனறுவை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான இளைஞர், யுவதிகள் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர். (அ)

## 13 ஐ ஏற்றுக்கொள்ள ...

அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் இருக்கின்றது. அது போதும் எனக் கூறவில்லை. ஆனால், அதை ஏற்றுக்கொள்வதில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்களுக்குள் பலர் அதை மறுக்கின்ற தன்மை இருந்தாலும் கூட இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு வருகின்ற அரசுகள் எல்லாம் எவ்வளவு பின்னடிக்கின்றது என்பதைக் கண்கூடாக காண்கின்றோம்.

இந்தநிலையில் இதை விட நாம் பெரிதாகப் பெறுவோம் என்று சொல்லி படிப்படியாக எங்களுடைய இனம் அதாவது வடக்கு - கிழக்கு தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டு வருகின்றார்கள். இன்றும் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு வசதியாக கனடா விசா, இலண்டன் விசா கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த வருடத்தில் வடக்கு - கிழக்கில் இருந்து ஏறக்குறைய சுமார் 20 ஆயிரம் நாட்டை விட்டு சென்றுள்ளார்கள்.

ஆகவே, கையில் இருப்பதையாவது இறுக்கமாகப் பற்றி வடக்கு - கிழக்கைக் கட்டியெழுப்பும் முயற்சி எடுக்க வேண்டும். இது ஒரு யதார்த்தமான முடிவு. சரியான முடிவு எனச் சொல்லவில்லை. சரியான முடிவை நோக்கிச் செல்ல வேண்டும். அதன்போது இருப்பதை இறுக்க பற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் உண்மையான நிலைப்பாடு.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் 5 கட்சிகள் ஒற்றுமையாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் இயங்கி வருகின்றோம். ஒவ்வொரு காலத்திலும் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப் பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு காரணங்களுக்காக அந்த ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. அதில் 90 வீதம் தேர்தலுக்காகத்தான். ஆனால், நாங்கள் தேர்தலுக்காக ஒற்றுமைப்படவில்லை. தேர்தலுக்கு முன்னரே இது பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நோக்கி நகர்வதற்காக ஒற்றுமையாக அமைக்கப்பட்ட அமைப்பு இது. தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகள் அனைத்தும் இதில் இணையக்கூடிய வகையில்தான் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளும் இதில் வந்து இணைவார்கள். அந்த ஒற்றுமையின் மூலமே நியாயமான தீர்வைப் பெற முடியும். அதற்குத்தான் மக்கள் ஆதரவு கிடைக்கும். அதன் மூலம் மக்களின் அபிலாஷைகளை அடைய முடியும்.” - என்றார். (அ)

## உயிர்த்த ஞாயிறு ...

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் வெளிப்படையான, பக்கச்சார்பற்ற, உண்மையை வெளிப்படுத்தும் விசாரணைகளின் மூலம் உயிர்கள் மற்றும் உடல் உறுப்புகளை இழந்த குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தரப்படும் எனவும், சம்பந்தப்பட்ட அனைவரும் தராதரம் பாராமல் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதுடன் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘சக்வல சு/ஹரு’ எனும் வகுப்பறைகள் வழங்கும் வேலைத்திட்டத்தின் 131 ஆவது கட்ட நிகழ்வில் கலந்து உரையாற்றும் போதே எதிர்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ரெம-77)

## வ

நீதிமன்றம் உத்தரவிடுமாயின் குறித்த தகவல்களைத் தான் இரகசியமாக நீதிபதிகளிடம் வழங்கத் தயார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றுள்ளார். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட


காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நவநாத சித்தரின் 122 ஆவது குருபூசை நிகழ்வு



மலையகத்தின் பிரசித்திபெற்ற நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி நவநாத சித்தரின் 122 ஆவது குருபூஜை அவரது ஆலயத்தில் நேற்று (24) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நவநாத சித்தரோடு இலங்கை வந்து காரைதீவில் சமாதியான சித்தானைக்குட்டி சுவாமியின் ஆலய நிர்வாகத்தினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நவநாத சித்தர் 1902.03.24 இல் பங்குனி உத்தரநாளில் நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்டத்தில் சமாதி அடைந்தார்.

நாவலப்பிட்டி நகரில் இருந்து 19 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர்தான் குயின்ஸ் பெரி. இங்குதான் நவநாத சித்தர் ஆலயம் அமைந்துள்ளது.

ஒரே நேரத்தில் ஒன்பது இடத்தில் இருக்கும் வல்லமைக் கொண்ட நவநாத சித்தரின் இலங்கை வருகை முற்றிலும் சுவாரஸ்யமானது.

நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்ட பெரியக் கங்காணி இந்தியாவில் இருந்து வருகை தந்தவர். அவரும் அவர் மனைவியும் இந்தியாவில் இருந்து இலங்கை வரும் போது நவநாத சித்தர் கங்காணியின் மனைவியிடம் எங்கே செல்கிறீர்கள் என வினவியுள்ளார், தாங்கள் இலங்கைக்கு செல்வதாக அவர் கூறியதும் தானும் அவர்களுடன் வரப் புறப்பட்டாராம் நவநாத சித்தர்.

ஆனால், கங்காணியின் மனைவி தாங்கள் மலைநாட்டுக்குச் செல்வதாகவும் அதிக குளிர், மழை நிறைந்த இடம் என்று கூறி, நீங்கள் அங்கு வந்து காலநிலையை சமாளிக்க மாட்டீர்கள், என அவரை அங்கேயே விட்டுவிட்டு வந்து விட்டார்கள்.

ஆனால் அவர்கள் தலைமன்னார் வந்தடைந்த வேளையில் நவநாத சித்தரும் தலைமன்னாருக்கு வந்திருப்பதைப் பார்த்து வியந்து போயுள்ளனர் கங்காணி குடும்பத்தார்.

இவர்களுடன் குயின்ஸ்பெரி தோட்டத்தை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தார் நவநாத சித்தர். அங்கே சென்று வனாந்தரத்தில் கற்குகை ஒன்றில் தங்கியிருந்து தவம் செய்தார். அவர் தங்கியிருந்த குகை அருகே தேயிலை மலைக்கு வேலைக்கு செல்லும் பெண்கள் தங்களின் குழந்தைகளை விளையாட விட்டுச் செல்வது வழக்கமாம்.

அப்படி குழந்தைகளை விட்டுச்சென்றபோது அதில் ஒரு குழந்தை அவரைப் பார்த்து வரைந்ததாகவும் அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள். இன்றுவரை அந்த ஓவியம் இவ்வாலயத்தில் இருப்பதுடன், நவநாத சித்தர் இப்படித்தான் இருந்திருப்பார் என்பதையும் இன்றைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள உதவியாகவும் உள்ளதாகச் சொல்கிறார்கள்.

தை மாதத்தில் இங்கு வனபோசன நிகழ்வு நடைபெறுகிறது. இந்த வனபோசன நிகழ்வு மிகப் பிரசித்தமானது.

வழிபாடு செய்து இந்த வனபோசனத்தில் கொடுக்கப்படும். உணவை உண்டால் குழந்தைப்பாக்கியம் கிடைக்கும் என்பது பலரது நம்பிக்கை, பலர் குழந்தைப்பேறு இன்றி நவநாதசித்தரை தரிசித்தமையால் அவரின் அனுக்கிரகத்தால் குழந்தைப்பேறு பெற்றுள்ளதாக தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

நவநாத சித்தர் சமாதி அடைந்த இடத்தில் ஒரு லிங்கம் தானாகவே தோன்றியதாகவும் அந்த லிங்கம் இன்றுவரை வளர்ந்து வருவதாகவும் மக்கள் நம்புகிறார்கள்.

- விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

## கல்முனை மஹ்மூத் கல்லூரி மாணவிகளின் பெற்றோருடன் மீளாய்வுக் கலந்துரையாடல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் - 11 (2024) பிரிவில் கல்வி பயிலும் மாணவிகளின், தரம் - 10 (2023) இடம்பெற்ற கல்வி நடவடிக்கை தொடர்பான மீளாய்வினை பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் கலந்துரையாடல் பகுதித்தலைவர் (11) ஏ.ஆர்.எம். நளீமின் நெறிப்படுத்தலில், கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் ஸ்மார்ட் கிளாஸ் மண்டபத்தில் இடம் பெற்றது.

தரம் 11 பிரிவுக்கான பெற்றோர் தரவட்டம் அமைக்கும் நோக்கில் அவர்களின் உதவியுடன் கல்வி, நடத்தைசார், பௌதீக அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் இச்சந்திப்பின் போது முன்மொழியப்பட்டன.

இந்நிகழ்வில் மாணவிகள் தவணைப் பரீட்சைகளில் பெற்ற புள்ளி விபரங்கள், அடைவு மட்டம், நடைபெற்ற செயற்றிட்டங்கள், எதிர்கால இலக்குகள் தொடர்பான நிகழ்த்துகள் அதிபர், பகுதித்தலைவர் ஆகியோரினால் பெற்றோர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி அதிபர் என்.டி. நதீகா, வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாணவர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




(நூருல் ஹுதா உமர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்த மருது பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச்.யூ. சுசந்தவின் நெறிப்படுத்தலில் நேற்று (24) தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்பவியல்பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பசின்டு குணரத்ன, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர்.

இவர்களுடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, அம்பாறை பொலிஸ் பொறுப்பதிகாரி (எஸ்பி) ஜெ.எச்.எம். என். ஜெயபத்மா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சமிக்க அமரசிங்க, இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை பிராந்திய பிரதிப்பணிப்பாளர் கங்கா சகரிக்க தமயந்தி, கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் மஜீட், இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளரும் பிரதிப்பணிப்பாளருமான ஏ.ஹமீர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது தகவல்தொழிநுட்பம் மற்றும் ஆங்கிலம் சிங்களம் உள்ளிட்ட கற்கைநெறிகளை பூர்த்திசெய்த 300 மாணவர்கள் தாங்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களுடன் அவர்களது பெற்றோரும் கலந்து கொண்டிருந்தனர்.



# ஸ்ரீலங்கன் விமான சேவையை மூன்று பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்வதற்கு அரசாங்கம் திட்டம்




ஸ்ரீலங்கன் விமான சேவையை கொள்வனவு செய்வதற்கு தனியார் முதலீட்டாளரிடமிருந்து முறையான விலைமனு சமர்ப்பிக்கப்படாவிட்டால், ஸ்ரீலங்கன் விமான சேவையை மூன்று பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக ஸ்ரீலங்கன் விமான சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கன் விமான சேவையானது தற்போது விமான நடவடிக்கைகளில் மட்டுமே நஷ்டத்தை சந்தித்து வருவதாகவும், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் விமான நிலைய சேவை நடவடிக்கைகளில் நஷ்டம் ஏற்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே, ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் விமான நிலைய சேவை நடவடிக்கைகள் ஆகியவற்றை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, விமான நடவடிக்கைகளை மாத்திரம் அரசாங்கத்தின் கீழ் இயக்குவதற்கான ஆலோசனைகள் மும் மொழியப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை கொள்வனவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஏலத்தொகை அரசாங்கத்தினால் 500 பில்லியன் ரூபா என பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால், நான்கு முதலீட்டாளர்கள் விமான சேவையைகொள்வனவு செய்ய முன்வந்த போதிலும் அவர்களால் அரசாங்கம் எதிர்பார்த்த ஏலத்தொகை சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக ஏலத்தை மேலும் 45 நாட்களுக்கு நீடிக்க துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரெம-80)

# லட்சக்கணக்கில் மக்களை கொழும்பிற்கு வரவழைத்து வாக்கு வங்கிகளைப் பெருப்பிக்க கட்சிகள் முஸ்தீபு

## மே தினப் பேரணிகள் தொடர்பாக திட்டங்கள்

எதிர்வரும் மே தினத்தன்று பெருந்திரளான மக்களை கொழும்புக்கு வரவழைத்து மே தின அணிவகுப்பை பிரமாண்டமாக நடத்துவதற்கு அனைத்து தரப்பினரும்தற்போது திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைபெறக்கூடிய தேர்தல்களை முன்னிட்டு தமது வாக்கு வங்கியை பெருக்கும் நோக்கில், அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த மே தினப் பிரசாரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிய வருகின்றது.

தேர்தல் கணிப்புகளின்படி 39 வீத வாக்குகளுடன் முதலிடத்தில் இருக்கும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி இதுவரை எந்தவொரு அரசியல் கட்சியும் செய்யாத வகையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை கொழும்புக்கு வரவழைத்து மே தின பேரணியை பிரமாண்டமாக நடத்த தீர்மானித்துள்ளதுடன், ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளும்

கொழும்பில் மே தின பேரணியை அதிகளவான மக்கள் பங்களிப்புடன் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(ரெம-81)

# திகாம்பரம் அணியின் மே தின விழா ஏப்ரல் 28ஆம் திகதி தலவாக்கலையில்



தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தின விழா எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி தலவாக்கலையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தப்படவுள்ளது என்று சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

வலப்பனை பிரதேசத்தில் இராகலை, வலப்பனை மற்றும் உடப்புஸ்ஸலாவ பிரதேச தொழிலாளர் தேசிய சங்க அங்கத்தவர்கள் உள்ளிட்ட மக்கள் சந்திப்பு இராகலை புறநெகும மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் ஆகியோருடன் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றுகையிலேயே திகாம்பரம் எம்.பி. மேற்படி தகவலை வெளியிட்டார்.

"ஐந்து வருடங்களுக்குப் பிறகு தொழிலாளர் தேசிய சங்கம் உலக தொழிலாளர் தினமான மே தின விழாவை தலவாக்கலையில் நடத்தவுள்ளது.

இதை மே முதலாம் திகதி நடத்தாமல், ஏப்ரல் 28.04.2024 அன்று மே தினக் கூட்டம், பேரணியை நடத்தவுள்ளோம்.

மே முதலாம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் மே தினக் கூட்டம் நடக்கவுள்ள நிலையில், அதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலையில் ஏப்ரல் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள மே தின விழாவில் சஜித் பிரேமதாஸ கலந்துகொள்வார்." - என்றும் திகாம்பரம் எம்.பி. கூறினார்.

இந்த மே தின நிகழ்வோடு தமது தேர்தல் பிரசார நடவடிக்கையையும் தொழிலாளர் தேசிய சங்கம் ஆரம்பிக்கவுள்ளது. (அ)

# 'சனிட்டரி நப்கின்' விலையேற்றத்தினால் மாணவிகள் பெரிதும் பாதித்துள்ளனர்!

## பலர் பாடசாலை வருவதில்லை - ஜோசப் ஸ்டாலின்



மாதவிடாய் காலங்களில் பயன்படுத்தும் 'சனிட்டரி நப்கின்' விலையேற்றத்தினால் பாடசாலை மாணவிகள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வடமத்திய, ஊவா, மத்திய, சப்ரகமுவ, மேல் மாகாணங்கள் மற்றும் மலைப் பிரதேசங்களில் பாடசாலைகளுக்குச் செல்லும் பல மாணவிகள் இவ்வாறு 'சனிட்டரி நப்கின்' பிரச்சினையை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'செனிட்டரி நெப்கின்'களின் விலை அதிவேகமாக உயர்ந்து வருவதானது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதை மனிதாபிமானத்துடன் பார்க்க வேண்டும் எனவும், சில அரசியல்வாதிகள் 'சனிட்டரி நப்கின்' விடயத்தை அரசியலாக்குவது வருந்தத்தக்கது எனவும் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவிகளில் பலர் மாதவிடாய் காலங்களில் 'சனிட்டரி நப்கின்' வாங்க முடியாமல் பாடசாலைக்கு வருவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன்,

இப்பிரச்சினைக்கு தீர்வு காண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, இலங்கையில் 15 வயதுக்கும் 47 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களில் சுமார் 40 வீதமானவர்கள் 'சனிட்டரி நப்கின்' பாவனையை நிறுத்தியுள்ளதாக அண்மைய கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-82)

# பிரதமர் சீனா விஜயம்

ஐந்து நாட்கள் விசேட விஜயம் மேற்கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்தன சீனாவுக்குப் பயணமாகியுள்ளார்.

சீன அரசின் அழைப்பின் பேரில் சீனா சென்றுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தனவை சீன பிரதமர் லி கியாங் வரவேற்றார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

டயினா ஈஸ்டன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக அவர் நேற்றிரவு நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

இதன்போது பிரதமருடன் 10 பேர் சீனாவுக்குப் பயணமாகியுள்ளனர். (அ)

# யாழ் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கணித விஞ்ஞான புதிர்ப்போட்டி பரிசளிப்பு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சட்டத்தணி இ.செல்வ ஸ்கந்தனால் நடாத் தப்படும் கணித விஞ்ஞானப் புதிர் போட்டியின் 2023ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நிகழ்வு கல்லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்ட வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார்.

இம்முறை கணிதப் புதிர்ப் போட்டியில் முதலாம் இடத்தை யாழ் இந்துக்கல்லூரி மாணவனும், விஞ்ஞானப் புதிர்ப் போட்டியில் முதலாம் இடத்தை யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி மாணவனும் பெற்று, ரூபா 40,000 பணப் பரிசிலையும் வென்றனர்.

வட மாகாண மட்டத்தில் 1724 மாணவர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் கணிதத்தில் 20 மாணவர்களும் விஞ்ஞானத்தில் 20 மாணவர்களும் பரிசில்களை வென்றனர்.

இவை தவிர 2022 உயர்தரத்தில் 3 ஏ சித்தி பெற்ற மகாஜனாக் கல்லூரி பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் சாதாரண தரத்தில் 9 ஏ , 8 ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கும் இவ்விழாவில் பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற சர்வதேச வன தின நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச வன தினத்தினையொட்டி கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பு நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் (22) நடைபெற்றது.

வைத்தியசாலை திட்டமிடல் பிரிவினரின் ஏற்பாட்டிலும் தரமுகாமைத்துவ பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ப.செல்வகுமாரின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட வன அலுவலர் ஆர்.எம்..விஜயபால, அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் எஸ்.உதயராஜன், விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட உதவி வன அலுவலர் கலாநிதி.எம்.ஏ..ஜாயா, அம்பாறை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவுப் பிரதிப்பணிப்பாளர் எச்.பி.அனீஸ், கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், கல்முனை வடக்கு வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி டொக்டர் ந.ரமேஸ், கல்முனை பிரதேச சுற்றாடல் சபை அதிகாரி திருமதி.பி. செவ்வேற்குமரன், அக்கரைப்பற்று வன வளப்பாதுகாப்பு அதிகாரிகளான எஸ்எம்.சபிக் மற்றும் ஏ.தியாகராஜா, கல்முனை கடற்படைத்தள கட்டளைத்தளபதி தம்மிக்க எக்கனாயக்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

முதலில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் "பசுமைப் புரட்சியை நோக்கிய பயணம்" தொனிப்பொருளுக்கான இலட்சினை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து, மர நடுகை நிகழ்வும் நடைபெற்றது. "புதிய வரவும் புதிய மரமும்" எனும் தொனிப்பொருளின் ஊடாக வைத்தியசாலையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு மரக்கன்று வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அதன் முதற்கட்டமாக மகப்பேற்று விடுதியில் அன்றைய தினம் பிறந்த 8 குழந்தைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்களினால் வரவேற்பு நடனம் மற்றும் "காடுகளை பாதுகாப்போம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் ஆகிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

அம்பாறை மாவட்ட உதவி வன அலுவலர் கலாநிதி ஜாயாவின் வனப் பாதுகாப்பு சம்மந்தமான உரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து அம்பாறை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு பிரதிபணிப்பாளர் அனீஸ் உரையாற்றினார். அவர் மரங்களின் முக்கியத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பு சம்மந்தமான விடயங்களை பகிர்ந்து உரையாற்றினார்.

தொடர்ந்து பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட வன அலுவலர் விஜயபாலவின் உரை நிகழ்த்தப்பட்டது.

அதனையடுத்து, பிரதம அதிதிகளான அம்பாறை மாவட்ட வன அலுவலர் விஜயபால, அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் உதயராஜன் ஆகியோருக்கு வைத்தியசாலையின் பணிப்பாளரினால் மரக்கன்று வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கும் மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், விடுதி பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், கணக்காளர், தாதிய பரிபாலகர், பரிபாலகி, நிர்வாக உத்தியோகத்தர், அனைத்து பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலையின் நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வினை தமிழ் மொழியில் சுகாதாரக் கல்விப் பிரிவுப் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. என். மனோஜினியும் சிங்கள மொழியில் பேச்சு மற்றும் மொழி சிகிச்சை பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர் செல்வி.ரி. யாபாவும் தொகுத்து வழங்கியிருந்தனர்.




# கல்முனை பொதுப் பணி மன்றத்தினால் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



(சர்ஜூன் லாபீர்)

கல்முனை பிராந்தியத்தில் பல்வேறுபட்ட சமூக சேவைகள் செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான கல்முனை பொதுப் பணி மன்றத்தினால் அண்மையில் (23) சுமார் 250 வருமானம் குறைந்த மக்களுக்கான உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் தொழிலதிபர் அல்ஹாஜ் எஸ்.எல் அமீர்(நயீர்) தலைமையில் அதன் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன் போது அமைப்பின் செயலாளர் நிசார் மஜீட், உயர்பீட உறுப்பினர்களான பி.டி கபீர், எம்.அஸ்வர் என பலரும் கலந்து கொண்டனர்.

# பொன்விழாக் கண்டுள்ள திருகோணமலை பாலம்போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயம்




(ஹஸ்பர் ஏ.எச் )

திருகோணமலையில் இருந்து சுமார் 16 கீலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பாலம்போட்டாறு பத்தினி அம்பாளின் துணையுடனும், தம்பலகாமம் ஆதிகோணேசப் பெருமானின் ஆசியுடனும் 1974.03.24 ஆம் திகதி, சமுக சேவையாளர் மார்க்கண்டு ஜெயம் அவர்களினால் தற்காலிக ஓலைக் கொட்டிலில் ஆரம் பிக்கப்பட்ட பாலம்போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயம் 24.03.2024 அன்று பொன்விழா கண்டுள்ளது என்பதில் அக்கிராம மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர்.

மார்க்கண்டு ஜெயம் அவர்களுடன் இணைந்து க.சண்முகலிங்கம், க.பரமசிவம் ஆகியவர்களும் ஆரம்பகாலத்தில் தொண்டர் அடிப்படையில் கல்வி கற்பித்து இக்கிராமத்திற்கு பெரும் பங்காற்றியிருந்தனர். பொன்விழா காணும் இக்காலகட்டத்தில் இவர்களது தன்னலமற்ற சேவையினை நினைவுகூர வேண்டியது அவசியமானதொன்றாகும்.

இதனைத் தொடர்ந்து 1980 இல் இருந்து 1988 வரை வேலாயுதம் தங்கராசா என்பவர் இப்பாடசாலையின் முதல் நிரந்திர அதிபராக கடமையாற்றிய காலத்தில் மிகவும் சிறப்பாக செயற்பட்டதுடன், இப்பாடசாலைக்கான நிரந்திர கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

1985 இல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக இடப்பெயர்வு ஏற்பட்ட காலத்தில் கற்பித்தல் நடவடிக்கைகள் சில காலம் தடைப்பட்டு இருந்தன. பின்னர் மீண்டும் தற்காலிககொட்டில்களில் இப்பாடசாலை இயங்கி வந்தது.

இதனைத் தொடர்ந்து 1992 இல் இ.தாமோதரம்பிள்ளை அவர்கள் அதிபராக கடமையாற்றிய காலத்தில்இப்பாடசாலைக்கென ஓதுக்கப்பட்ட நிரந்தரக் கட்டிடத்தில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன.

1993-1997 காலப்பகுதியில் நா.சித்திரவேல் அதிபராக பொறுப்பேற்று இப்பாடசாலையினை வழிநடத்திச் சென்றதுடன் தொடர்ந்து 1997-1998 காலப்பகுதியில் சி.பத்மநாதனும், 1998 - 1999 காலப்பகுதியில் சு.மோகனதாசும், 1999-2008 வரை சி.காளிராஜாவும் அதிபராகப் பொறுப்பேற்று இப்பாடசாலைக்கு பாரிய சேவையினை ஆற்றியுள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து 2008- 2010 வரை கோ. லோகேந்திரன், 2010- 2023 வரை வை.கமலநாதன் ஆகியோரும் அவர்களது சேவையினை சிறப்புடனும் ஆர்வத்துடனும் நிறைவேற்றிச் சென்றிருந்தார்கள்.

இக்கிராமத்தில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பெற்றோர் தமது பிள்ளைகளின் அடிப்படை வசதிகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலும் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான இப்பாடசாலை மாணவர்கள் தமது பல்வேறு திறமைகளை வெளிக்காட்டி வருவது பாராட்டப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

இப்பாடசாலை பொன்விழாக் காணும் இவ்வாண்டில் (2024) திருமதி. தமயந்தி கெங்காதரன் அதிபராகப் பொறுப்பேற்று அவரது சேவையினை திறமையுடனும் சிறப்புடனும் ஆற்றி வருகின்றார்.

## கல்முனையில் நடைபெற்ற உலக சிறுநீரக தின நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் உலக சிறுநீரக தினத்தினையொட்டிய சிறப்மு இந்நிகழ்வானது வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வைத்தியசாலையின் குருதி சுத்திகரிப்பு பிரிவினரின் ஏற்பாட்டிலும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் இடம்பெற்ற இந் நிகழ்வில், வரவேற்புரையினை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. என்.மனோஜினி வழங்கியதோடு தலைமை உரையினை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் வழங்கியிருந்தார்.

மேலும் வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டொக்டர் எம்என்எம். சுவைப்பினால் சிறுநீரக நோய் பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில், சிறுநீரகத்தின் தொழிற்பாடு, அதனுடன் தொடர்புபட்ட நோய்கள், அறிகுறிகள் முக்கியமாக இதற்கான சிகிச்சை முறைகள், மருந்துகள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கமாக விவரித்தார்.

இதனைத் தொடர்ந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தி யோகத்தரான எஸ். சந்திரகுமாரினால் சிறுநீரக நோயினால் பாதிப்புற்றோருக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியுதவிகள், இலவசக் கொடுப்பனவுகள், அவற்றைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் என்பன பற்றிய தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

மேலும் வைத்தியசாலையின் போசணையாளர் சாமில் பௌஷாத், எவ்வாறான உணவுப் பழக்கங்களினால் சிறுநீரக நோய் ஏற்படுகிறது, மற்றும் சிறுநீரக நோயை ஏற்படுவதை தடுக்க எவ்வாறான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்ற பலவகை விளக்கங்களை வழங்கினார்.

நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், தாதிய பரிபாலகர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்க உறுப்பி னர்கள், சிறுநீரக நோயாளிகள், மற்றும் நோயாளிகளின் உறவினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.






## சிலோன் மீடியா போரத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

சிலோன் மீடியா போரத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு சாய்ந்தமருது மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலில் போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்றது.

இந்த இப்தார் நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.மன்சூர், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில், வீதி அபிவிருத்தி அதிகார சபை கிழக்கு மாகாண காரியாலய நிறைவேற்று பொறியியலாளர் ஏ.எம் றியாஸ், சாய்ந்தமருது ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் எம்.ஐ.மன்சூர், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நெளபர் ஏ.பாவா, சாய்ந்தமருது மஸ்ஜிதுல் பலாஹ் தலைவர், பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எம். நெளபர் சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், கல்முனை பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ், நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ. அன்வர், நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.எம் முபீன் உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், உலமாக்கள், கல்விமான்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ரமழான் பற்றிய மார்க்க சொற்பொழிவினை சாய்ந்தமருது மஸ்ஜிதுல் பலாஹ் பேஷ் இமாம் மௌலவி ஏ.நெளபர் நிகழ்த்தினார்.

சிலோன் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் ஏ.எஸ்.எம். முஜாஹித்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வு சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமரின் நன்றி உரையுடன் நிறைவு பெற்றது.

## கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மக்கள் போராட்டம்



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்கு முறைகளுக்கு எதிராக பிரதேசப் பொது மக்கள் இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்துடன் கூடிய ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் முன்பாக பதாதைகளைத் தாங்கிய வண்ணம் பொதுமக்கள் அங்கு தங்களது போராட்டத்தை நடத்தினர்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த இந்த அலுவலகம் 1988களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்ப்பட்டது. தொடர்ந்து 1993 இது அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகின்றது.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல் வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக பிரயோகித்து வருகின்றனர் என்று தெரிவித்து, அதனை எதிர்த்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திட்டமிடப்பட்டு கல்முனை வடக்கு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை எமது அமைதிப் போராட்டம் தொடரும், என மக்கள் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2024 இல் வெளியிடப்பெற்றது.